**செய்தி வெளியீடு எண்:639** **நாள் : 18.12.2014**

## <u>செய்தி வெளியீடு</u>

### கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலை பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு

தமிழ்நாட்டில் 43 சர்க்கரை ஆலைகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 16 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளும் அடங்கும். கூட்டுறவு மற்றும் பொதுத்துறையின் கீழ் உள்ள 18 சர்க்கரை ஆலைகளின் பணியாளர்களின் சம்பளம் மற்றும் படிகள் குறித்த ஒப்பந்த காலம் 31.03.2008 உடன் முடிவுற்றது.

தமிழ்நாடு கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் ஊதியக்குழுவின் ஊதியம் பெற்று வரும் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்குவது தொடர்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் மேற்படி பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க 09.05.2012 அன்று அறிவிப்பு வெளியிட்டார்கள். அவ்வறிவிப்பின் அடிப்படையில், நிலுவையில் இருந்த 10% இடைக்கால நிவாரணத் தொகை 01.04.2008 முதல் கணக்கிடப்பட்டு மேற்படி பணியாளர்களுக்கு ஒரே தவணையாக வழங்கப்பட்டது. மேலும், அடிப்படை ஊதியத்தில் 25% சிறப்பு ஊதியமாக 01.04.2012 முதல் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

தென்னிந்திய சர்க்கரை ஆலைகளின் சம்மேளனத்தின் உறுப்பினர்களாக உள்ள தனியார் சர்க்கரை ஆலைகள், தங்களது ஆலைகளில் உள்ள தொழிற்சங்கங்களுடன் 08.10.2014 அன்று பேச்சு வார்த்தை நிறைவு செய்து ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளன. அந்த ஒப்பந்தம் 01.10.2014 முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் அவர்கள் முன்னிலையில், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் அனைத்து தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளுடன் பலமுறை பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

சர்க்கரையின் உற்பத்தி செலவு உயர்வு, விற்பனை விலை வீழ்ச்சி, கரும்பு வரத்து குறைவு ஆகிய கடுமையான சூழ்நிலைகளை கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் சந்தித்து வருகின்றன.

எனினும், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளின் 6061 தொழிலாளர்களின் நலனை முன்னிட்டு, தொழிலாளர்களின் கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்து கீழ்க்கண்ட வகையில் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க அரசு முடிவெடுத்துள்ளது.

**ஊதிய உயர்வு:**

தென்னிந்திய சர்க்கரை ஆலைகளின் சம்மேளனம் ஏற்படுத்தியுள்ள ஊதிய உயர்வு ஒப்பந்தப்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊதிய உயர்வு 1.10.2014 முதல் வழங்கப்படும். விதி எண் 110–ன்கீழ் 09–05–2012 அன்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் அறிவிப்பின்படி புதிய ஊதிய விகிதங்களில் அடிப்படை ஊதியத்தில் (Basic pay) 25 விழுக்காடு சிறப்பு ஊதியமாக உயர்த்தி வழங்கப்படும். கீழ்க்கண்டவாறு பல்வேறு பணிநிலைகளில் உள்ள பணியாளர்கள் ஊதிய உயர்வு பெறுவர்.

இதன்மூலம் மாதம் ஒன்றுக்கு உத்தேச பணப்பயன் ரூபாய் 1930/–முதல் ரூபாய் 2397/–வரை பல்வேறு நிலையில் உள்ள தொழிலாளர்கள் ஊதிய உயர்வு பெறுவர்.

நல்லெண்ணத்தொகை (Goodwill Amount):

1) ஆலைக்குடியிருப்பில் வசிக்கும் பணியாளர்களுக்கு ஒருமுறை தொகையாக (One time settlement) 01–10–2014 அன்று பணியில் இருப்பவர்களுக்கு நல்லெண்ணத்தொகை (Goodwill Amount) ரூ.5000/– வழங்கப்படும்.

2) ஆலைக்குடியிருப்பில் வசிக்காத பணியாளர்களுக்கு ஒருமுறை தொகையாக(One time settlement) 01–10–2014 அன்று பணியில் இருப்பவர்களுக்கு நல்லெண்ணத்தொகை (Goodwill Amount) ரூ.10000/– வழங்கப்படும்.

தென்னிந்திய சர்க்கரை ஆலைகளின் சம்மேளனத்தின் ஒப்பந்தக்கூறுகளில் உள்ளவாறு இதர படிகள் வழங்கப்படும்.

**என்.எம்.ஆர் தொழிலாளர்கள்:**

என்.எம்.ஆர் தொழிலாளர்களுக்கு அன்ஸ்கில்டு மற்றும் செமிஸ்கில்டு தொழிலாளர்கள் பெறும் புதிய ஊதியத்தின் அடிப்படையில் ஊதிய நிர்ணயம் செய்து வழங்கப்படும்.

நல்லெண்ணத் தொகையாக ரூ.5000/– வழங்கப்படும்.

இந்த ஊதிய ஒப்பந்த காலம் 01.10.2014 முதல் 30.09.2018 முடிய நான்கு ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும்.

தற்போது வழங்கிடும் ஊதிய உயர்வின் காரணமாக ஆண்டு ஒன்றிற்கு கூடுதலாக ரூ.12.34 கோடி தொழிலாளர்களுக்கு வழங்கப்படும். இதைத் தவிர நல்லெண்ணத்தொகை ரூ. 4.63 கோடி உடனடியாக வழங்கப்படும்.

**வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**